8. அரசினர் சட்ட முன்வடிவு

நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.09 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்,

149. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரை அரங்குகள் (முறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் (திரை அரங்குகள்) 11.1.1979ஆம் தேதியிட்ட அரசாணை எண். 120-ல் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரை அரங்குகள் முறைப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IX/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது].

150. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரை அரங்குகள் (முறைப் படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் (திரை அரங்குகள்) 27.5.1978ஆம் தேதியிடப்பட்ட அரசாணை எண், 1180-ல் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரை அரங்குகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IX/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது].